# உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன். யாத் 23 : 26

பாதிவயதில் எடுத்துக்கொள்வாரோ என்று பயப்படும் என் அன்பு சகோதரனே, சகோதரியே

"**உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன்**" என்று கர்த்தர் சொல்கிறார்.

மனைவி ஒரு பக்கம், பிள்ளை ஒரு பக்கம், கணவர் ஒரு பக்கம் பெற்றோர் ஒரு பக்கம், உறவினர் ஒரு பக்கம் என அங்கலாய்க்கும் அன்பரே;

வேதம் சொல்வதை கவனியுங்கள். படுத்தபடுக்கையிலே இருக்கும் சகோதரியே, சகோதரனே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். எனக்கு இந்த உலகில் யார் இருக்கிறார்கள்? **எல்லாம் பணத்துக்குதான்**–என்று அங்கலாய்க்கும் சகோதரியே, சகோதரனே, இயேசுவின் பொன்மொழிகளைக் கேளுங்கள்.

**உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன். அல்லேலூயா**

**சங்கீதக்காரன் சொல்கிறான். 90:10**

எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம் பெலத்தின் மிகுதியால் என்பது வருஷம்.

**இதிலுள்ள முக்கியமானகாரியமானது,**

அதின் மேன்மையானதும் வருத்தமும் சஞ்சலமுமே – என்பதாக.

**யாக்கோபு 4 : 14 சொல்கிறது :** நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றி, பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே. – என்பதாக.

நாளைக்கு என்ன நடக்குமோ என்று பயப்படும் கர்த்தருடைய பிள்ளையே,

**யோபு 7:7ல் சொன்னது போல,**

என் பிராணன் காற்றைப்போல் இருக்கிறது, என் கண்கள் இனி நன்மையைக் காணப்போவதில்லை என்று அங்கலாய்க்கும் அன்பரே, **"உன் ஆயுசு நாட்களைப் பூரணப்படுத்துவேன்"–** என்று, கர்த்தர் சொல்கிறார்.

**ஆதி 25 : 8 ஐ படித்துப்பாருங்கள் :** பின்பு ஆபிரகாம் நல்ல நரை வயதிலும், முதிர்ந்த, பூரண ஆயுசிலும், பிராணன் போய், மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்

**ஆதி 35 : 28ஐ படித்துப்பாருங்கள் :** ஈசாக்கு விருத்தாப்பியமும், பூரண–ஆயுசுமுள்ளவனான். தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான். இந்தப் பத்திரிகையை ஆவலுடன் படிக்கும் என் நண்பரே தேவனுடைய ஆசீர்வாதங்களில் ஒன்று "**பூரண ஆயுசு**"– என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

**ஆயுசு நாளைப் பூரணப்படுத்த ஆலோசனை நீதி 4 : 10**

என் மகனே கேள், என் வார்த்தைகளை ஏற்றுக்கொள் அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும்.

**நீதி 9 : 11 கர்த்தர் சொல்கிறார்.**

என்னாலே உன் நாட்கள் பெருகும். உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும் – என்பதாக

**நீதி 10 : 27 செல்கிறது .**

கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயுசுநாட்களைப் பெருகப்பண்ணும்–என்பாதக

**சங்கீதம் 55 : 23 கவனியுங்கள்**

இரத்தப் பிரியரும், சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுளின் நாட்களில் பாதி வரையிலாகிலும் பிழைத்திருக்க மாட்டார்கள். நானோ உம்மை நம்பியிருக்கிறேன். – என்பதாக.

**சங் 21 : 4 சொல்வதை கவனியுங்கள்**

அவர் உம்மிடத்தில் ஆயுசைக் கேட்டார். நீர்அவருக்கு என்றென்றுள்ள தீர்க்காயுசை அளித்தீர் – என்பதாக.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

ஆனால் சாலமோனின் வேண்டுகோள் மிக வித்தியாசமாக இருந்தது.

**2 நாளாகம் 1:11 ஐ படித்துப்பாருங்கள்**

கர்த்தர் சாலமோனைப் பார்த்து நீ நீடித்த ஆயுசுநாளைக் கேளாதபடியினால், ஐசுவரியத்தையும், சம்பத்தையும், கனத்தையும் உனக்குத் தருவேன்–என்பதாக.

சகோதரனே, சகோதரியே,

**உன் ஆயுசுநாட்களை கர்த்தர் பூரணப்படுத்துவார்–** ஆமேன்.